**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2018**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சைவம் சிவனுடன் சம்பந்தமானது என்றவர் யார்?
2. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
3. திருநாவுக்கரசரின் இளமைப் பெயரை எழுதுக.
4. பெரிய புராணத்தின் ஆசிரியர் யார்?
5. முதல் மூன்று ஆழ்வார்களைக் குறிப்பிடுக.
6. சூடிக்கொடுத்த சுடர்கொடி யார்?
7. வைணவப் பாசுரங்களை எவ்வாறு அழைப்பர்?
8. தொல்காப்பியம் திருமாலை எவ்வாறு குறிப்பிடுகிறது?
9. சமண சமயத் தீர்த்தங்கரர்களின் எண்ணிக்கை யாது?
10. ஒரு பொருளை ஒரு நோக்கில் மட்டும் பார்க்கும் முறை எது?
11. புத்தரின் இயற்பெயர் என்ன?
12. பௌத்த சமயத்தின் பெரும் பிரிவுகள் யாவை?
13. இவனைச் சிலுவையில் அறையுங்கள் என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
14. அப்துல் ரகுமான் தந்தையின் பெயர் என்ன?
15. பெத்தலகேம் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. திருவிளையாடற்புராணத்தின் சிறப்புகளை எழுதுக.
2. காளமேகப் புலவர் – சிறு குறிப்பு வரைக.
3. நம்மாழ்வாரின் தொண்டினை விவரி.
4. பரிபாடலில் இடம்பெற்றுள்ள திருமால் பற்றிய செய்திகளை எழுதுக.
5. மகிந்தரின் சமயப் பணி குறித்து எழுதுக.
6. பௌத்த சமயக் கோட்பாடுகள் மூன்றினை எழுதுக.
7. சிலுவையின் மேன்மைகளைக் கூறுக.
8. பல்சந்த மாலை – நூற்குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பன்னிரு திருமுறைகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) திருமாலின் அவதாரங்களை விளக்கி வரைக.

2. (அ) தமிழ் இலக்கியத்திற்குச் சமணர்கள் செய்த தொண்டினை எழுதுக

(அல்லது)

(ஆ) பௌத்தமும் தமிழும் குறித்துக் கட்டுரை எழுதுக.

3. (அ) கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) நபிகளின் பெருமைகளை மிகுராசு மாலை வழிநின்று விளக்குக.

***